பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
Chief Secretary's Secretariat, Northern Provincial Council

பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - நிர்வாகம்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් කාර්යාලය - පරිපාලන
Office of the Deputy Chief Secretary - Administration

மாகாண சபை வளாகம், A9 வீதி, கைதடி | පළාත් සභාව සංකීර්ණය, A9 පාර, කෛතඩි | Council Complex, A9 Road, Kaithady

எனது இல / මගේ අංකය / My No } NP/02/01/AT/2027 Date: 2026.10.19

அமைச்சுச் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

**<u>வடக்கு மாகாண சபைக்கு இணைக்கப்பட்டுள்ள இலங்கை பொறியியலாளர் சேவை உத்தியோகத்தர்களது (தரம் - I, II மற்றும் III) வருடாந்த இடமாற்ற தீர்மானங்கள் மீதான மீளாய்வு – 2027</u>**

மேற்படி விடயம் தொடர்பான எமது சம இலக்க 2026.09.18 ஆம் திகதியில் வெளியிடப்பட்ட வடக்கு மாகாண சபைக்கு இணைக்கப்பட்டுள்ள இலங்கை பொறியியலாளர் சேவைக்கான 2027 ஆம் வருடத்திற்கான இடமாற்றத் தீர்மானங்கள் மீதான மீளாய்வுக் கோரிக்கைகள், மீளாய்வுச் சபையினால் மீளாய்வு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் தீர்மானங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இத்தீர்மானங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், இம் மீளாய்வுத் தீர்மானங்கள் யாவும், 2027.03.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்பதையும் இம் மீளாய்வுத் தீர்மானப் பட்டியலில் இடம்பெறாத ஏனைய பொறியியலாளர்களுக்கான இடமாற்றக்கட்டளைகள் யாவும் எமது சம இலக்க 2026.09.18 ஆம் திகதிய கடித தீர்மானத்திற்கமைய தொடர்ந்தும் வலுவிலிருக்கும் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

வடக்கு மாகாண சபைக்கு இணைக்கப்பட்டுள்ள இலங்கை பொறியியலாளர் சேவைக்கான 2027 ஆம் ஆண்டிற்கான இவ்விடமாற்றத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கான பூரண ஒத்துழைப்பானது தங்கள் அனைவரிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கமைய, இடமாற்றம் வழங்கப்பட்டிருக்கும் அலுவலர்களை உரிய தினத்தில் புதிய சேவை நிலையத்தில் கடமைக்கு அறிக்கையிடுவதற்கு ஏதுவாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*தனுஜா முருகேசன்,*
பிரதம செயலாளர்.

தனுஜா முருகேசன்
பிரதம செயலாளர்
வட மாகாணம்

பிரதி : ஆளுநரின் செயலாளர், ஆளுநர் செயலகம், வடக்கு மாகாணம்.

பிரதமசெயலாளர் / ප්‍රධානලේකම් / Chief Secretary } Tel : 021 222 0843 (Dir) : 021 222 0840 (Gen) Fax : 021 222 0841 e-mail : chiefsecnpc@gmail.com

பிரதிப்பிரதமசெயலாளர் / නියෝජ්‍යප්‍රධානලේකම් / Deputy Chief Secretary } Tel : 021 223 2351 (Dir) : 021 222 0960 (Gen) Fax : 021 222 0950 e-mail : ppas.np@gmail.com